செ.வெ.எண்:63/ஜூன் நாள்:25.06.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## பல்வேறு அரசுத்துறைகளின் சார்பாக 1,116 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.78,17,965 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை

## மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் பயனாளிகளுக்கு வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (25.06.2016) நடைபெற்ற விழாவில் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் பல்வேறு அரசுத்துறைகளின் சார்பாக 1,116 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.78,17,965 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

வருவாய்த்துறையின் சார்பாக விபத்து நிவாரண உதவித்தொகையாக 13 பயனாளிகளுக்கு ரூ.13,32,500/-க்கான காசோலைகளையும், இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகையாக 114 பயனாளிகளுக்கு ரூ.9,62,500/-க்கான காசோலைகளையும், திருமண உதவித்தொகையாக 82 பயனாளிகளுக்கு ரூ.6,72,000/-க்கான காசோலைகளையும், நலிந்தோர் உதவித்தொகையாக 1 பயனாளிக்கு ரூ.20,000/-க்கான காசோலையினையும், 10 பயனாளிகளுக்கு மாதந்தோறும் முதியோர் உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகளையும், 10 பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனை பட்டா ஆணைகளையும், வேளாண்மைத்துறையின் சார்பாக 20 பயனாளிகளுக்கு ரூ.2,70,000 /-அரசு மானியத்தில் ஆடுகள் பெறுவதற்கான ஆணைகளையும், 10 பயனாளிகளுக்கு ரூ.1,75,000/- அரசு மானியத்தில் மாடுகள் பெறுவதற்கான ஆணைகளையும், தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பாக 5 பயனாளிகளுக்கு கடனுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.20,20,000/-க்கான காசோலைகளையும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பாக 3 பயனாளிகளுக்கு ரூ.12,000/- மதிப்பிலான விலையில்லா தையல் இயந்திரங்களையும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சார்பாக 3 பயனாளிகளுக்கு ரூ.12,705/- மதிப்பிலான விலையில்லா சலவைப்பெட்டிகளையும், 6 பயனாளிகளுக்கு ரூ.20,700/- மதிப்பிலான விலையில்லா தையல் இயந்திரங்களையும் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள் வழங்கினார்.

மேலும், உணவுப்பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பாக 520 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளையும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பாக 10 பயனாளிகளுக்கு ரூ.3,00,000/- மதிப்பிலான திருமண உதவித்தொகையுடன் 40 கிராம் தங்கத்தினையும், 26 பயனாளிகளுக்கு ரூ.95,420/- மதிப்பில் மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்களையும், 20 பயனாளிகளுக்கு ரூ.1,26,800/- மதிப்பில் காதொலிக்கருவிகளையும் (2 காதுகளுக்கும்), 93 பயனாளிகளுக்கு ரூ.1,05,090/-மதிப்பில் காதொலிக்கருவிகளையும், 120 பயனாளிகளுக்கு ரூ.8,38,650/- மதிப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்களையும், சமூக நலத்துறையின் சார்பாக பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 50 பயனாளிகளுக்கு ரூ.25,00,000/-க்கான காசோலைகளையும், அகதிகள் மறுவாழ்வு துறையின் சார்பாக 64 பயனாளிகளுக்கு ரூ.2,56,000/-மதிப்பிலான விலையில்லா தையல் இயந்திரங்களையும் ஆக மொத்தம் 1,116 பயனாளிகளுக்கு ரூ.78,17,965 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள் பேசியதாவது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஏழை எளிய மக்கள் வாழ்வில் ஏற்றம் பெறும் விதமாக எண்ணற்ற மக்கள் மேம்பாட்டுத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள். சட்டமன்ற பொது தேர்தல் 2016 முடிவுகளைத்தொடர்ந்து 6-வது முறையாக தமிழ்நாடு முதலமைச்சராக பதிவியேற்றவுடன், விவசாயிகளின் நலம் காக்கும் வகையில் கூட்டுறவு வங்கிகளுக்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய பயிர்க்கடன்களை தள்ளுபடி செய்தல், அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட் கட்டணமில்லாத மின்சாரம் வழங்குதல், ஏழைப்பெண்களின் திருமணத்திற்கு வழங்கப்பட்டு வந்த 4 கிராம் தங்கத்தினை 8 கிராமாக உயர்த்தி வழங்குதல், கைத்தறி நெசவாளர்களுக்கு கட்டணமில்லாமல் வழங்கப்பட்டு வந்த 200 யூனிட் மின்சாரத்தினை 750 யூனிட்டுகளாக உயர்த்தி வழங்குதல், படிப்படியாக மதுவிலக்கு அமல்படுத்துவதற்கு முதற்கட்டமாக டாஸ்மாக் மதுபானக்கடைகள் செயல்படும் நேரத்தினை நண்பகல் 12 மணி முதல் இரவு 10 மணி வரையாக குறைத்திடவும், தமிழகம் முழுவதும் செயல்பட்டு வரும் டாஸ்மாக் மதுபானக்கடைகளில் முதற்கட்டமாக 500 சில்லறை மதுபானக்கடைகளை மூடுதல் உள்ளிட்ட ஐந்து

முக்கிய திட்டங்களுக்கான கோப்புகளில் கையெழுத்திட்டார்கள். அதனடிப்படையில் இத்திட்டங்கள் அனைத்தும் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு பொதுமக்கள் பயன்பெற்று வருகின்றனர்.

இதுதவிர, தகவல் தொழில்நுட்பத்துறையின் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா கைபேசி வழங்குதல், மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணிணி வழங்குதல், செட்-ஆப் பாக்ஸ் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களும் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் செயல்படுத்தும் அனைத்து திட்டங்களும் மக்களின் நலனுக்காகவும், அவர்தம் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதற்காகவுமான திட்டங்கள் ஆகும். இத்தகைய திட்டங்களை பொதுமக்கள் முழுமையாக பயன்படுத்திக்கொண்டு வாழ்க்கையில் வளம்பெற வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசினார்.

இவ்விழாவில் இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.அ.அன்வர்ராஜா எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ்.முத்தையா (பரமக்குடி), திரு.எஸ்.கருணாஸ் (திருவாடானை), மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எம்.அலிஅக்பர், மாவட்ட ஊரட்சிக்குழுத் தலைவர் திரு.மு.சுந்தரபாண்டியன், பரமக்குடி சார் ஆட்சியர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன், இ.ஆப., இராநமாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.இரா.ராம்பிரதீபன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சிப் பிரிவு) திரு.ஆ.செல்லத்துரை உட்பட நகர் மன்றத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**